கட்டணம் வசூல் செய்யப்பட்டிருக்கிறது. மருந்து தெளிக்காததால் பயிர் சேதம் அடைந்திருக்கிறதோடு, பணமும் வசூல் செய்யப் பட்டிருக்கிறது. ஆகவே, வசூல் செய்த பணத்தைத் திருப்பிக் கொடுக்க முடியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மருந்து தெளிக்கப் படும்.

ஜவ்வாது மலையிலுள்ள வனவிலங்குகள் புகலிடம்

*** 121 வினா—திரு. தொ. ப. சீனிவாசன் :** மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) போளூர் தொகுதியில் ஜவ்வாது மலைத் தொடரில் அம்மர்தி தங்கும் விடுதி அருகில் சிறிய அளவில் உள்ள வன விலங்குகளின் கண்காட்சியை பெரிய அளவில் மிருகக் காட்சி சாலையாக மேம்படுத்தும் செயற்குறிப்பு ஏதேனும் அரசிடம் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. தொ. ப. சீனிவாசன் : தலைவர் அவர்களே, ஜவ்வாது மலைப் பகுதியில் இப்பொழுது தனியார் துறையில் மிருகக் காட்சி சாலை நடைபெறுகிறது. பஸ் போக்குவரத்தும் இருக்கிறது. ஆனால், அந்த சாலை அங்கே சரியாக இல்லாத காரணத்தால், பஸ் போக்கு வரத்தும் நல்ல முறையில் இல்லை. ஆகவே, அந்தச் சாலையைச் செப்பனிட முன்வருவார்களா ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவர் அவர்களே, தனியாக இதைப்பற்றிக் கேட்டால் பதில் சொல்லலாம்.

தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கத்திலிருந்து முறையீடு

*** 122 வினா—திரு. சு. துரைசாமி :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாடு மின் கழகத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் திருப்பூரில் இருந்து மின் வாரியத் தலைவருக்கு 1971 ஏப்ரல் மாதத்தில் கோரிக்கைகள் ஏதேனும் அனுப்பியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

(உ) அதன் மீது எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) ஆம்.

(இ) மூன்று முதல் நான்கு ஆண்டுவரை ஊழியஞ் செய்து உள்ள தற்காலிக நாட்கூலித் தொழிலாளர் பலர் இருக்கையில் 1970 ஆகஸ்டில் தற்காலிக நாட்கூலித் தொழிலாளராக நியமிக்கப் பட்டிருந்த திரு. எம். செல்வராஜு என்பவர் 7 நாள் ஊழியம் செய்ததற்குள்ளாகவே, செய்தியாளாக நியமிக்கப்பட்டார் என்னும் குற்றச்சாட்டு முறையீட்டில் அடங்கியிருந்தது.

(உ) இது குறித்து (மின்சார) தலைமைப் பொறியாளர் விசாரணை நடத்தினர். சில்லறைச் செலவின் நிதியிலிருந்து ஊதியம் பெறும் செய்தியாள் திரு. எம். செல்வராஜு 21—6—71-ம் நாள் பிற்பகலிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

Cinchona Plantations in Denkanikota taluk

• 123 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : Will the Hon. the Minister for Electricity be pleased to state—

(a) whether there is any proposal under the consideration of the Government to introduce cinchona plantations in the hilly parts of the Denkanikota taluk in Dharmapuri district ; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : (அ) இல்லை, ஐயா.

(இ) கேள்விக்கு இடமில்லை.

Appointment of Conductors in State Transport Nagercoil Branch.

• 124 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Transport be pleased to state—

(a) whether ninety candidates were selected for the post of conductors in December 1967 by the Nagercoil Branch of the State Transport Department ;

(b) whether all of them have been appointed; and

(c) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம். பயணிகள் துணைவர்கள் பதவிக்கு 1967 நவம்பரில் 90 ஆட்கள் தெரிந்தெடுக்கப் பட்டனர் ;

(இ) 90 பேர்களில், 83 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

(உ) எஞ்சிய எழுவரில், அறுவர் வேலை காலி ஏற்பட்ட பொழுது உரிய வயதைத் தாண்டிவிட்டனர். எனவே, அரசு அவர் களுக்கு வயது விதியிலிருந்து விதிவிலக்கு அளித்தது. மற்றும் ஒருவர் உரிய வயதை அடைந்திருக்கவில்லை. இப்போது அவர் உரிய வயது அடைந்துவிட்டார். இந்த ஏழு பேர்களும் துறையில் வேலை காலி ஏற்படும்போது நியமிக்கப்படுவர்.